RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 55 | மார்ச்.3 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5


# உலகளாவிய மோதல்களுக்கு பேச்சுவார்த்தை, தூதரக முயற்சி மூலம் தீர்வு: பிரதமர் மோடி வலியுறுத்தல்

புதுடெல்லி: மார்ச்.3-

மத்திய கிழக்கில் மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில், உலகளாவிய மோதல்களுக்கு பேச்சுவார்த்தை மற்றும் தூதரக முயற்சிகள் மூலம் தீர்வு காணப்படுவதையே இந்தியா ஆதரித்து வந்துள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். மத்திய கிழக்கின் தற்போதைய நிலை கவலை அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டெல்லியில், கனடா பிரதமர் மார்க் கார்னி உடன் இணைந்து பத்திரிகையாளர்களைச் சந்தித்த பிரதமர் மோடி, மத்திய கிழக்கில் தற்போது அதிகரித்து வரும் மோதல் குறித்த கேள்விக்கு பதில் அளித்தார். அப்போது அவர், ''இத்தகைய பிரச்சினைகளுக்கு, பேச்சுவார்த்தை மற்றும் தூதரக முயற்சிகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை இந்தியா எப்போதும் வலியுறுத்தியுள்ளது. மோதல்களை அமைதியான முறையில் தீர்க்கும் நிலைப்பாட்டை இந்தியா நீண்ட காலமாக பின்பற்றி வருகிறது.

பயங்கரவாதம், தீவிரவாதம், தீவிர சிந்தனைகள் ஆகியவை நமக்கு மட்டுமல்லாது, உலகம் முழுவதற்கும் பெரிய சவால்களாக உள்ளன. இத்தகைய அச்சுறுத்தல்களை சமாளித்து உலக அமைதியையும் நிலைத்தன்மையையும் உறுதி செய்ய நாடுகளுக்கு இடையில் நெருக்கமான ஒத்துழைப்பு



அவசியம்.


உலகம் முழுவதும் உருவாகும் பதற்றங்கள் குறித்து இந்தியாவின் நிலைப்பாடு எப்போதும் தெளிவாக இருந்துள்ளது. இந்தியா தொடர்ந்து அமைதி மற்றும் நிலைத்தன்மையை வலியுறுத்தி வருகிறது. இரண்டு ஜனநாயக நாடுகள் ஒன்றிணைந்து செயல்படும்போது, அமைதிக்கான குரல் மேலும் வலிமை பெறும்'' என தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்த கேள்விக்கு பதில் அளித்த பிரதமர் மோடி, ''பிராந்தியத்தில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு நிலைமையை நெருக்கமாக கண்காணித்து வருகிறது. அங்குள்ள நாடுகளுடன் இந்தியா தொடர்ந்து தொடர்பில் இருக்கிறது.'' என தெரிவித்துள்ளார்.

ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து நடத்திய வான் தாக்குதலில், ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். மேலும், அந்நாட்டின் 40 முக்கிய அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டனர். தொடர்ந்து அரசியல் தலைமைகள், ராணுவத் தளபதிகள், ஆயுத கிடங்குகள் ஆகியவற்றை குறிவைத்து இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா தாக்குதல்களை நடத்தி வருகின்றன. பதிலுக்கு, இஸ்ரேலுக்கு எதிராகவும் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க நிலைகளை குறிவைத்தும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா இஸ்ரேலை தாக்கியதைத் தொடர்ந்து, லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது.








## நாத்தாகுடி கண்மாய் வரத்து ஓடைக்கு 'கை' வைத்தார்களா? ஆக்கிரமிப்பு குற்றச்சாட்டு: விவசாய நிலங்கள் ஆபத்தில்!

சிவகங்கை: மார்ச்.3

சிவகங்கை மாவட்டம் உட்பட்ட பில்லூர் குரூப் கரும்பவூர் கிராமத்தில் உள்ள நாத்தாகுடி கண்மாய்க்கு செல்லும் வரத்து ஓடை கால்வாய் தனிநபர்களால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அரசு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவை விட ஓடையின் கரை உயரமும் அகலமும் குறைக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக சர்வே எண் 18, 19 பகுதிகளில் உள்ள சிலர் ஓடைக்கு செல்லக்கூடிய கரையை அகற்ற முயற்சி மேற்கொண்டதாகவும், முதற்கட்டமாக அதன் அகலத்தை குறைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த நடவடிக்கையில் தனம் அபிநயா, சரளாதேவி உள்ளிட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் ஈடுபட்டுள்ளதாக குற்றம்சாட்டப்படுகிறது.

இது தொடர்பாக அப்பகுதியில் நிலம் வாங்கியுள்ள சரவணன் என்பவர், பொது நலன் கருதி கால்வாய்கள் பரிபோகக்கூடாது என்ற நோக்கில் மாலை தந்தி நாளிதழுக்கு கடிதம் அளித்ததன் பேரில் இச்செய்தி வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

மேலும், சர்வே எண் 17 அரசு பதிவுகளில் "ஓடை வாய்க்கால்" எனவும் அரசு புறம்போக்கு நிலமாகவும் அடங்கலில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர். கால்வாய் அடைபட்டால் ஏராளமான விவசாய நிலங்கள் நீரின்றி பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமிழக அரசு விவசாயத்திற்கும் நீர் வளங்களுக்கும் முக்கியத்துவம் அளித்து வரும் நிலையில், உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம் வழங்கிய பல தீர்ப்புகளிலும் நீர்வரத்து பாதிக்கப்படக் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளதை நினைவுகூர்ந்து, சிவகங்கை மாவட்ட நிர்வாகம் உடனடி ஆய்வு செய்து ஆக்கிரமிப்பை அகற்றி நீர்வரத்து கால்வாயை பாதுகாக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





## குளச்சல் போக்குவரத்து காவல் நிலையம் சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் போக்குவரத்து காவல்துறை மற்றும் லட்சுமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவிகள் இணைந்து சாலை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு பேரணி மணவாளக்குறிச்சி பரப்பற்று, பிள்ளையார் கோவில், சேரமங்கலம் வழியாக நடத்தப்பட்டது. இந்த விழிப்புணர்வு பேரணியை குளச்சல் போக்குவரத்து காவல் நிலைய காவல் ஆய்வாளர் சுடலைமுத்து தொடங்கி வைத்தார். உடன் கல்லூரி பேராசிரியர்கள் . ஜெயந்தி மற்றும் .அழகேசன் உடன் இருந்தனர்.

## மதுரை : அரைகுறையாக அந்தரத்தில் நிற்கும் செல்லூர் இணைப்பு பாலம்?

மதுரை: மார்ச்.3

மதுரை கோரிப்பாளையம் மேம்பாலத்தில் செல்லூர் இணைப்பு பாலம் அரைகுறை பணிகளுடன் அந்தரத்தில் நிற்பதால், முதல்வர் இந்த மேம்பாலத்தை திறந்து வைத்தும் கோரிப்பாளையம், வைகை வடகரை சாலை, பந்தல்குடி சாலை, செல்லூர் சாலைகளில் வழக்கம்போல் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மதுரை கோரிப்பாளையத்தில் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணும் வகையில் தமுக்கத்தில் இருந்து நெல்பேட்டை அண்ணா சிலை வரை மேம்பாலமும், கோரிப்பாளையம் தேவர் சிலை அருகே இடதுபுறமாக மேம்பாலத்திலேயே திரும்பி செல்லூர் 100 அடி சாலைக்கு செல்வதற்கு ஒரு இணைப்பு பாலமும் அமைக்க திட்டமிடப்பட்டது.



இவற்றில் தமுக்கம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரை ரூ.213 கோடியே 80 லட்சம் மதிப்பீட்டில் கட்டிய மேம்பாலத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த பிப். 21ல் திறந்து வைத்தார்.

இந்த மேம்பாலத்தை, சட்டப்பேரவை தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன்பாக திமுக ஆட்சியிலேயே திறந்துவிட வேண்டும் என்பதற்காக கடைசி ஒரு மாதத்தில் இரவு, பகலாக பணிகள் அவசரம் அவசரமாக நடந்தன.

இதனால் தமுக்கம் நெல்பேட்டை அண்ணா சிலை வரை முடிக்கப்பட்ட மேம்பாலத்தை மட்டும் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். ஆனால், இந்த பாலத்துடன் திட்டமிடப்பட்ட செல்லூர் 100 அடி சாலை இணைப்பு பாலம், அரைகுறை யாக பாதியிலேயே நிற்கிறது.

தற்போது தமுக்கம் நெல்பேட்டை அண்ணா சிலை வரையிலான மேம்பாலப் பகுதியில் மட்டும் போக்குவரத்து நடைபெறுகிறது. செல்லூர் பிரிவு பாலம் எப்போது முழுமையாக கட்டி முடிக்கப்படும் என தெரியவில்லை.

கோரிப்பாளையம் மேம்பாலம் அருகே பணிகள் நிறைவுபெறாமல் அந்தரத்தில் நிற்கும் செல்லூர் இணைப்பு பாலம்.

அதனால், தற்போது வரை யானைக்கல் பாலம், செல்லூர் பாலம் ஸ்டேஷன் சாலை வழியாக இருந்து வரும் வாகனங்கள், கோரிப்பாளையம், தமுக்கம் வழியாக அழகர் கோவில் சாலையில் வரமுடியாமல் இன்னமும் செல்லூர் பந்தல்குடி கால்வாய் வழியாகவே கடும் போக்கு வரத்து நெரிசலுக்கு மத்தியில் செல்கின்றன.

அதேபோல், தமுக்கத்தில் இருந்து செல்லூர் சாலைக்கு செல்லக்கூடிய வாகனங்கள் இணைப்பு பாலம் இல்லாததால் மேம்பாலத்தின் அடிப்பகுதி வழியாக தேவர் சிலையை கடந்து ஆழ்வார்புரம் வைகை வடகரை சாலை வழியாக செல்லூர் சாலைக்கு செல்ல வேண்டிய வேண்டிய நிலை உள்ளது.

அதனால், கோரிப்பாளையம் மேம்பாலத்தை முதல்வர் திறந்து வைத்தும், கோரிப்பாளையம் பகுதியில் போக்குவரத்து நெரிசல் குறையவில்லை. நெடுஞ் சாலைத்துறை அதிகாரிகள், தமுக்கம்நெல் பேட்டை அண்ணா சிலை வரையிலான மேம்பாலத்தை திறந்து வைத்ததோடு தங்கள் பணி நிறைவுபெற்றதாகவும், செல்லூர் இணைப்பு பாலம் பணிகளை விரைவுப்படுத்தி முடிக்காமல் மெத்தனம் காட்டுவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

சித்திரைத் திருவிழாவுக்கு முன்பாகவாவது செல்லூர் பால இணைப்பு பணிகளை நிறைவு செய்து பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.



■ 2026 தமிழக சட்டமன்றத் தேர்தலில், நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்ற தொகுதியில்நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம்.ராஜூ போட்டியிட விருப்பம் தெரிவித்துதிமுக தலைமை கழகமான சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக நிர்வாகிகளுடன் சென்று விருப்பமனு வழங்கினார்.



■ திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அடுத்த கவுண்டச்சி புதூர் பஞ்சாயத்திற்கு உட்பட்ட கணபதி நகர், ராஜா நகர், கோகுலம் காலனி, வர்ஷினி நகர், வள்ளலார் நகர், அமராவதி நகர், கோல்டன் சிட்டி உட்பட்ட பகுதிகளில் சுமார் 20க்கும் பகுதிகளை 3000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் குடியிருந்து வருகின்றனர். இங்கு கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக அடிப்படை வசதிகள் ஆன தார் சாலை, குடிநீர் வசதி, தெரு விளக்கு புறநகர் காவல் நிலையம் வைக்க வேண்டும். மேலும் இங்கே இரண்டு நாட்களுக்கு ஒரு முறை வழிப்பறிப்பு மற்றும் திருட்டு நடைபெற்று வருகிறது.ஆகவே இதனை உடனடியாக செய்து தர வேண்டி அப்பகுதி குடியிருப்போர் நலச் சங்கத்தின் தலைவர் கருப்பையா தலைமையில் மக்கள் தாராபுரம் டு பொள்ளாச்சி சாலையில் திடீர் சாலை மறியல் செய்தனர் இதனால் அங்கு சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து ஏற்பட்டது இதில் குடியிருப்போர் நலச் சங்கத்தின் செயலாளர் சேது பொருளாளர் ஜான் அலெக்சாண்டர் ஒருங்கிணைப்பாளர் லிங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# களைகட்டிய அண்ணா அறிவாலயம்! 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு

கிருஷ்ணகிரி, மார்ச்.3-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்.எல்.ஏ அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் விருப்ப மனு வழங்கினார். இந்த நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் அன்பரசு, மாநில சுற்றுச் சூழல் அணி துணைச் செயலாளர் சங்கர் தர்மன், நகர செயலாளர் அஸ்லம் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர். தேர்தலை முன்னிட்டு அண்ணா அறிவாலயம் உற்சாகக் கோலத்தில் களைகட்டியது.



■ கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், 12 ம் வகுப்பு பொதுத் தேர்வு மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.மதன்குமார் உள்ளார்.

# நீலகிரி மாவட்டம் குன்னூர் லாலி அரசு மருத்துவ மனையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட சுகாதாரம் சார்பில் வலியில்லா நீலகிரி திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் தொடங்கி வைத்தார்



நீலகிரி, மார்ச்.3-

நீலகிரி மாவட்டம் வலியில்லா நீலகிரி குன்னூர் லாலி அரசு மருத்துவமனையில், மாவட்ட நிர்வாகம் மற்றும் சுகாதாரத்துறை சார்பில், வலியில்லா நீலகிரி (Pain Free Nilgiris) திட்டத்தினை, கூடுதல் முதன்மை செயலர் (சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை) H.செந்தில்குமார் தமிழ்நாடு குழும இயக்குநர், தேசிய சுகாதார குழுமம் மரு.அ.அருண் தம்புராஜ் , அவர்கள் ஆகியோர் முன்னிலையில் (காணொலி காட்சி வாயிலாக), மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு அவர்கள் தொடங்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்டம் குன்னூர் லாலி அரசு மருத்துவமனையில் வலியில்லா நீலகிரி (Pain Free Nilgiris) என்ற விரிவான மாவட்ட அளவிலான வலி மற்றும் நோய்த்தணிப்பு சிகிச்சைத் (Palliative Care) திட்டமானது இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது தமிழ்நாட்டில் முதல்முறையாக தொடங்கப்பட்டுள்ளது. நாள்பட்ட நோய்களான புற்றுநோய், பக்கவாதத்தால் ஏற்படும் உடல் பாதிப்புகள் மற்றும் முதியோர்களுக்கு ஏற்படும் மூப்பு சார்ந்த நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், மாவட்ட நிர்வாகம், சுகாதாரத்துறை, மைக்ரோலேண்ட் பவுண்டேஷன் (Microland Foundation) (Pallium India) ஆகியவற்றுடன் அரசு தனியார் பங்களிப்பு (றிறிறி) முறையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது, அரசால் தொடங்கப்பட்ட முன்னோடித் திட்டமான "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. முதற்கட்ட பணியானது இன்றைய தினம் தொடங்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள மாவட்ட நோய்த் தணிப்பு சிகிச்சை மையத்தை (District Nodal Centre) வலுப்படுத்தியும், வீடுகளுக்கே சென்று வழங்கப்படும் வலி மேலாண்மை சேவைகளின் தரத்தை மேம்படுத்தியும், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு முறையான பயிற்சிகள் அளித்து, வலி நிவாரணம் மற்றும் நோய்த்தணிப்பு சிகிச்சை சேவைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தப்படுகிறது.

மேலும், எதிர்கால விரிவாக்கத்திற்காக ஒரு வலுவான மையக்கட்டமைப்பை உருவாக்கி நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் மருத்துவச் செலவுகளைக் கணிசமாகக் குறைத்து தேவையற்ற மருத்துவமனை அனுமதிகளை குறைப்பதும், சிறந்த கூட்டாண்மை மற்றும் திறன்மேம்பாட்டின் மூலம், எந்தவொரு நோயாளியும் உரிய சிகிச்சையின்றி வலியால் அவதிப்படக்கூடாது என்பதை உறுதிசெய்வதும் "வலியில்லா நீலகிரி" திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் திறன்மேம்பாடு, பகிரப்பட்ட சேவைகள், மேற்பரிந்துரை வழிமுறைகள், மைய கிளை பராமரிப்பு முறை ஆகியவற்றை மையக்கருத்தாக கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நோயாளிகள் எந்த குறிப்பிட்ட மையத்திற்கு செல்ல வேண்டும். அவர்களுக்கு எந்த மாதிரியான சிகிச்சை அளிக்க வேண்டும் என்பது குறித்து பயிற்சி உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தொடங்கப்படவுள்ளது.

மேலும், சமூகம் சார்ந்த சுகாதார அமைப்புகளை வலுப்படுத்துவதற்கும், தகுதியான அனைத்து பயனாளிகளுக்கும் சமமான, எளிதில் அணுகக் கூடிய மற்றும் தரமான நோய்த்தணிப்பு சிகிச்சைச் சேவைகளை வழங்கும் வகையில் இத்திட்டமானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. படிப்படியாக இத்திட்டம் விரிவு செய்யப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஸ்ரீனிவாசன், இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) மரு.ராஜசேகரன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.சோமசுந்தரம், குன்னூர் நகர்மன்ற தலைவர் சுசீலா, இருப்பிட மருத்துவ அலுவலர் மரு.ரவிசங்கர், மைக்ரோலேண்ட் பவுண்டேஷன் நிறுவனர் கல்பனாகார், பாலியம் இந்தியா குழுவினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# தஞ்சை மாவட்டம்திருவையாறு காவிரி கரையில் மாசி மகத்தையொட்டி ஏராளமானோர் புனித நீராடி மறைந்த தங்கள் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்தனர்

தஞ்சாவூர் மார்ச். 3-

மறைந்த தங்கள் முன்னோர்களுக்கு மாதம்தோறும் வரும் அமாவாசை மற்றும் வருடாந்திரத்தில் திதி கொடுக்க தவறியவர்கள் மாசிமகம் அன்று திருவையாறு காவிரி கரையில் புனித நீராடி தர்ப்பணம் செய்தால் புண்ணியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

அதன்படி மாசி மகமான இன்று காசியை விட சிறந்ததாக கருதப்படும் திருவையாறு காவிரி கரை புஷ்ய மண்ட படித்துறையில் ஏராளமானோர் காவிரியில் புனித நீராடி மறைந்த தங்கள் முன்னோர்களை வேண்டி புரோகிதர்களுக்கு பச்சரிசி, காய்கறிகள், கீரை ஆகியவற்றை தானமாக வழங்கி எள், பச்சரியில் பிண்டம் பிடித்து காவிரி ஆற்றில் விட்டு தர்ப்பணம் செய்தனர். பின்னர் ஐயாறப்பர் கோவிலில் வழிபட்டனர்.

திருவையாறு அறம்வளர்த்தநாயகி உடனாகிய ஐயாறப்பர் கோயிலில் இருந்து காலை மாசிமகத்தை முன்னிட்டு காலை சுவாமி ,அம்பாள் சிறப்பு அலங்காரத்தில் புறப்பாடாகி புஷ்ய மண்ட படித்துறையில் எழுந்தருளினார் தொடர்ந்து காவிரியாற்றில் அஸ்திரதேவரு தீர்த்த வாரி நடந்தது. பின்னர் சுவாமி , அம்பாள் நான்கு ராஜ வீதிகள் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார் இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் அன்பரசு, அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் விருப்ப மனு வழங்கினார்.இந்த நிகழ்வில்,கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்.எல்.ஏ மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ்,மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சங்கர் தர்மன், நகர செயலாளர் அஸ்லம் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர்.தேர்தலை முன்னிட்டு அண்ணா அறிவாலயம் உற்சாகக் கோலத்தில் களைகட்டியது.



■ கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், 12 ம் வகுப்பு பொதுத் தேர்வு மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.மதன்குமார் உள்ளார்.

# பழனியில் நெடுஞ்சாலை மாயா போன்ற திரைப்படங்களில் நடித்த ஆரி அர்ஜூனன் செய்தியாளர் சந்திப்பில் திரையரங்க உரிமையாளர்கள் மீது கடுமையான குற்றம் சாற்று



திண்டுக்கல், மார்ச்.3-

திண்டுக்கல் மாவட்டம் பழனியைச் சேர்ந்த பிக் பாஸ் தமிழ் சீசன் 4 (2021) வெற்றியாளர் மற்றும் திரைப்பட நடிகர் ஆரி அர்ஜூனன்விஜய்

'நெடுஞ்சாலை''மாயா' போன்ற படங்களில் நடித்த இவர் பிக் பாஸ் வீட்டில் உண்மையாகவும் நேர்மையாகவும் இருந்ததற்காக பெரிதும் பாராட்டப்பட்டார்

இவர் நடிப்பில் வெளியான 4மீலீ ஃப்ளோர் முதல் நாள் தான் பிறந்த ஊரான பழனியில் ரசிகருடன் நண்பர்களுடன் உற்சாகத்துடன் திரைப்படத்தை பார்த்துவிட்டு வெளியில் வந்தவர் செய்தியாளர் சந்திப்பில் தான் நடிப்பில் வெளியான ஃபோர்த் ஃப்ளோர் திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பு பெற்றுள்ளது இத்திரைப்படத்தை எல் ஆர் சுந்தரபாண்டியன் திருப்பூரைச் சேர்ந்தவர் இயக்கி உள்ளார் இது ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் நடக்கும் தற்கொலை சம்பவங்களை மையமாகக் கொண்ட திரில் பொழுதுபோக்கு திரைப்படம். தொடர்ந்து ஐந்து படங்கள் நடிக்க உள்ளேன் சென்ற மாதம் பிப்ரவரி 27 ஆம் தேதி திரைப்படம் வெளியாகும் நிலையில் மால்கள் தியேட்டர் உரிமையாளர்கள் புறக்கணித்த காரணத்தால் தற்பொழுது வெளியாகி உள்ளது. திரையரங்க உரிமையாளர்கள் அதிக விளம்பரம் செய்யும் திரைப்படம் மற்றும் பெரிய நடிகர் நடிகைகள் நடிக்கும் திரைப்படத்திற்கு மட்டுமே முன்னுரிமை தருவதாக குற்றம் சாட்டினார் தொடர்ந்து தற்பொழுது வெளியாகி உள்ள நடிகை ராதிகா நடித்துள்ள தாய்க்கிழவி திரைப்படம் சிவகார்த்திகேயன் இயக்கியுள்ள இத் திரைப்படத்திற்கு மட்டும் அதிக திரையரங்குகள் தரப்பட்டுள்ளது எதன் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது விஜய் சங்கீதா விவகாரத்து விஷயத்தில் கருத்து கூறுவது நாகரீகமற்ற செயல். தயாரிப்பாளர்களுக்கு படம் வெளியிடுவதில் திரையரங்க உரிமையாளர்களால் ஏற்படும் பிரச்சனை நடிகர் சங்கத்திடம் எடுத்துக் கூறப் போவதாக கூறினார் .

ஒரு திரைப்படம் தயாராகும் பணத்தைவிட விளம்பரத்திற்கே அதிகமாக செலவு செய்தால் மட்டுமே திரையரங்கு உரிமையாளர்கள் எந்த ஒரு நிபந்தனையும் இல்லாமல் ஏற்றுக் கொள்கிறார்கள் மற்றும் தமிழ்நாட்டில் ஒரு தமிழன் எடுத்த ஒரு சில திரைப்படம் வெளியிட முடியாமல் இருப்பது மிகப்பெரிய வருத்தத்தை உண்டாக்குகிறது என கூறினார்



■ கன்னியாகுமரி மாவட்டம்நாகர்கோவில் மாநகராட்சி 5வது வார்டுக்குட்பட்ட காமராஜர் நகர் முதல் குறுக்கு தெரு மற்றும் சர்ச்ரோடு முதல் குறுக்கு தெருவில் ரூ.3.80 இலட்சம் மதிப்பீட்டில் அலங்கார தரைகற்கள் அமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர்.ரெ.மகேஷ். தொடங்கி வைத்தார்.உடன் துணைமேயர் . மேரிபிரின்ஸிலதா பகுதி செயலாளர் .சேக்மீரான் தி மு க நிர்வாகிகள் ராபர்ட்சிங், அன்பு, .விஜயராஜன், .சங்கர், .ராஜேந்திரன் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




# தமிழ்நாடு முதலமைச்சர் முக.ஸ்டாலின் பிறந்தநாள் விழா

கன்னியாகுமரி, மார்ச்.3-

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் சாமிதோப்பில் ஒன்றிய செயலாளர் பா.பாபு வழிகாட்டுதலின்படி மாவட்ட பிரதிநிதி தனசம்பத் அவர்கள் தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

இதில் ஒன்றிய துணை செயலாளர் பிரேமலதா, வடக்கு தாமரைகுளம் முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் ஆறுமுகம் பிள்ளை, கிளைச் செயலாளர்கள் அறிவழகன் மகேந்திரன், கிளை நிர்வாகிகள் சுமதி, பால் அன்னசெல்வன், விஜயன், ஸ்ரீனிவாசன், யோசுவா, சுடலை மணி, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் சந்திரகலா, மற்றும் தேவகிருபன், ஐயப்பன், சுபாஷ் திரவியராமன், பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள் தேவகி, தாரணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் வெல்லும் தமிழ் பெண்கள் ஸ்டாலின் மகளிர் படை நிர்வாகிகள் இல்லந்தோறும் கழக அரசின் சாதனைகளை விளக்கி பரப்புரை மேற்கொண்டர்கள்.



# பம்மல் தெற்கு பகுதி 10வது வார்டு திமுக சார்பில் கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா

பம்மல் பிப்.3-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த பம்மல் தெற்கு பகுதி 10 வது வார்டு கழக திமுக சார்பில் கழக தலைவர், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி பம்மல் 10 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மதினாபேகம் தலைமையில் வட்டகழக செயலாளர் முகமது அப்பாஸ் முன்னிலையில் நடைபெற்றது இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக காஞ்சி மாவட்ட ஆதி திராவிட நலதுறை குழு அமைப்பாளர் தன்ராஜ் கலந்து கொண்டு கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கினார். நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் மதினாபேகம் திமுக கழக கொடியின் இருவண்ணம் பொருந்திய கேக் வெட்டி இனிப்புகள் வழங்கி வெகுவிமர்சியாக கொண்டாடினர்.இதனை தொடர்ந்து ஏழை, எளிய மக்கள் 500 க்கும் மேற்பட்டோர்க்கு பிரியாணி வழங்கினர் இதில் 10வது வார்டு பகுதி திமுக நிர்வாகிகள், மகளிரணியினர் உட்பட ஏராளமனோர் கலந்து கொண்டனர்.




■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, முதலமைச்சரின் காப்பீட்டு திட்டத்தின் கீழ், 13 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.12 இலட்சத்து 58 ஆயிரத்து 600 மதிப்பில் நவீன செயற்கை கால் மற்றும் கைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.தினேஷ் குமார் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். உடன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.முருகேசன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோவில் மாசி கொடை விழா திருக்கொடியேற்ற நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, கலந்துகொண்டார்



கன்னியாகுமரி, மார்ச்.3-

கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோவிலில் நடைபெற்ற மாசி கொடை விழா கொடியேற்ற நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, கலந்துகொண்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோவிலில் நடைபெற்ற மாசி கொடை விழா கொடியேற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டதில் மகிழ்ச்சியடைகிறேன். இன்று தொடங்கி வரை பத்து நாட்களுக்கு திருவிழா வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான கழிப்பறை, 24 மணி நேரமும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, வாகனங்கள் நிறுத்துமிடம், தற்காலிக பேருந்துநிலையங்கள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் போக்குவரத்து துறையின் வாயிலாக திருவிழா நடைபெறும் நாட்களில் பக்தர்களின் வசதிக்காக தேவையான சிறப்பு பேருந்துகள் இன்று முதல் இயக்கப்பட்டு வருகிறது.

மேலும் கடலில் நீராடும் பக்தர்களின் பாதுகாப்புக்கு தேவையான அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருவிழா சிறப்பாக நடைபெற அனைத்து பக்தர்களும் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதியரசர் விக்டோரியா கௌரி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.ஸ்டாலின், கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் .ஜே.ஜி.பிரின்ஸ், பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா, இணை ஆணையர் ஜான்சிராணி, துறை அலுவலர்கள், பக்தர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.



# தாம்பரம் மாநகர 47வது வட்ட திமுக வட்ட பிரதிநிதி எம்.பிரபாகரன் ஏற்பாட்டில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை யொட்டி 500 பேருக்கு அறுசுவை உணவு

தாம்பரம் மார்ச். 03-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி தாம்பரம் மேற்கு பகுதியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்த நாள் விழா தாம்பரம் மாநகர செயலாளரும் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ் ஆர் ராஜா அவர்களின் அறிவத்தலின்படி தாம்பரம் மாநகர 47வட்ட பிரதிநிதி எம்.பிராபகரன் ஏற்பாட்டில் 47வது வட்ட செயலாளர் கே.டி.வி.முருகன் முன்னிலையில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டல குழு தலைவரும் பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் கலந்து கொண்டு கட்சியின் கொடி ஏற்றி இனிப்பு வழங்கி பொது மக்கள் சுமார் 500 க்கும் மேற்பட்ட நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். உடன் இந்நிகழ்ச்சியில் முன்னாள் வட்ட செயலாளர் பிரஸ் சேகர், பகுதி துணை செயலாளர் வேலுமணி, மாமன்ற உறுப்பினர் ரமணி ஆதிமூலம், மாநகர பிரதிநிதி கலைவாணன், லோகேஷ், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் கார்த்திக், மாநகர விவசாய அணி துணை அமைப்பாளர் குட்டி, ஆர்.புருஷோத்தமன் எக்ஸ் எம்சி, மற்றும் ராஜா சிவா, ஆர்.கே.பாலாஜி, முத்து கிருஷ்ணன், மணி, திமுக நிர்வாகிகள் வட்ட பொருளாளர் ஆர்.அன்பழகன் மற்றும் வட்ட துணை செயலாளர் வெங்கடராமன், வெங்கடேஷன், உள்ளிட்ட நிர்வாகிகள் பொது மக்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்புத்தனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றியம் சார்பில் மேற்கு ஒன்றிய செயலாளர் சரவணன் தலைமையில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சங்கர் தர்மன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சியினர் பலர் கலந்து கொண்டனர்.

# 4 வயது சிறுமி வன்கொடுமை வழக்கில் விசாரணை நீதிமன்றம் வழங்கிய ஆயுள் தண்டனையை உறுதி செய்தது ஐகோர்ட் கிளை



மதுரை, மார்ச்,3-

4 வயது சிறுமி வன்கொடுமை வழக்கில் விசாரணை நீதிமன்றம் வழங்கிய ஆயுள் தண்டனையை ஐகோர்ட் கிளை உறுதி செய்தது. 2018ல் ராமநாதபுரம் கமுதியில் 4வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் கந்தசாமி என்பவர் கைது செய்யப்பட்டார். குற்றவாளி கந்தசாமிக்கு ஆயுள் தண்டனை வழங்கி சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது. சிறப்பு நீதிமன்ற உத்தரவை எதிர்த்து கந்தசாமி தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவை ஐகோர்ட் கிளை தள்ளுபடி செய்தது.

# ரோபோ சை நெக்சஸ் 2026 Robo-Sci-Nexus 2026ரோபோட்டிக்ஸ் - சயின்ஸ் எக்ஸ்போஅறிவியலில் பெண்கள் – விக்சித் பாரத் 2047 நோக்கி முன்னேற்றம்புதுமை. உட்சேர்ப்பு. ஊக்கம்.அறிவியல், ஆற்றல் மற்றும் முன்னேற்ற மனப்பான்மையை கொண்டாடும் ஒரு விழா

மேடவாக்கம்.மார்ச்.3-

செங்கல்பட்டு மாவட்டம் ஸ்ரீசைதன்யா ஃப்யூச்சர் பாத்வேஸ் மேடவாக்கம் வளாகத்தில், ரோபோ சை நெக்சஸ் 2026 ஒரு ஆழமான ட்ரோன் தொழில்நுட்ப பணிமனை மூலம் துவங்கியது. இங்கு கற்றல் புத்தகங்களைத் தாண்டி வானத்தில் பறந்தது.

மாணவர்கள் ஏரோடைனமிக்ஸ் கோட்பாடுகளை ஆராய்ந்தனர் லிப்ட், த்ரஸ்ட் டார்க் மற்றும் சமநிலை ஆகியவற்றை புரிந்துகொண்டனர். ரிமோட் கட்டுப்பாட்டு அமைப்புகள், தரவு பரிமாற்ற முறைகள் மற்றும் நேரடி ட்ரோன் பறக்கும் செயல்பாடுகளை அனுபவித்தனர்.

கூறுகளை ஒன்றுசேர்த்து அமைப்பது முதல் பறப்பை கட்டுப்படுத்துவது வரை, ஆர்வம் உண்மையிலேயே பறந்தது.

அன்று நடைபெற்ற சிறப்பு கூட்டம் வலிமையான செய்தியை எடுத்துச் சென்றது.

ஒரு உருக்கமான மைம் நிகழ்ச்சியின் மூலம், எங்கள் மாணவர்கள் அறிவியலில் பெண்களின் பயணத்தை அவர்களின்



போராட்டங்கள், விடாமுயற்சி மற்றும் புரட்சிகர சாதனைகளை வெளிப்படுத்தினர். ஒரு சொல் கூட பேசாமல், செய்தி ஆழமாக பதிந்தது:

பெண்கள் முன்னேற்றத்தின் ஒரு பகுதியாக மட்டும் இல்லை அவர்கள் மாற்றத்தின் ஊக்கிகள்.

எங்கள் இளம் மேவரிக்ஸ் மேடையேறி, விக்சித் பாரத் 2047 குறித்த தங்களின் பார்வையை ஊக்கமூட்டும் வகையில் பகிர்ந்தனர். புதுமை, பொறுப்பு மற்றும் தலைமைத்துவம் குறித்து அவர்கள் பேசினர் இந்தியாவின் எதிர்காலம் துணிச்சலான, படைப்பாற்றலான மற்றும் நாட்டிற்கு சேவை செய்யத் தயாரான இளைஞர்களின் கைகளில் இருப்பதை உறுதிப்படுத்தினர்.

முதல்வர் உறுதியுடன் உரையாற்றி, அறிவியல் முன்னேற்றத்தின் இயக்க சக்தி பெண்களே என வலியுறுத்தினார். புதுமை, உட்சேர்ப்பு மற்றும் முன்னேற்றத்தை முன்னெடுக்கும் இந்தியாவை உருவாக்கும் மேவரிக்ஸ்களை உருவாக்குவதில் நிறுவனம் உறுதியாக இருப்பதை அவர் மறுபடியும் உறுதிப்படுத்தினார்.

இந்த நிகழ்விற்கு இந்தியாவின் பழமையான மற்றும் மதிப்புமிக்க மின்னணு சங்கங்களில் ஒன்றான ணிலிசிமிழிகிவின் தலைவர் டாக்டர் சசிகுமார் கெந்தம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். தனது ஊக்கமூட்டும் உரையில், அறிவியலில் பெண்களை வலுப்படுத்துவது விருப்பமானது அல்ல அது தேசிய வளர்ச்சிக்கும் தொழில்நுட்ப முன்னணிக்கும் அவசியமானது என வலியுறுத்தினார்.

மிகுந்த உற்சாகத்துடன் ரோபோ சை நெக்சஸ் 2026 அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டது. ரிப்பன் வெட்டப்பட்டு, புதுமைகளின் சிறப்பான கண்காட்சிக்கு துவக்கமிடப்பட்டது ஏர்போர்ன் ரோபோட்டிக்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி திரு ஆரோன் அவர்கள் ரோபோட்டிக்ஸ் எக்ஸ்போவை துவக்கி வைத்தார். கற்பனை மற்றும் பொறியியல் சிறப்புகள் சந்திக்கும் உலகிற்கு அவர் கதவுகளைத் திறந்தார்.

கண்காட்சி அரங்கு ரோபோட்டிக்ஸ் மாதிரிகள், அறிவியல் புதுமைகள் மற்றும் நிலைத்த தீர்வுகளால் உயிர்ப்புடன் காட்சியளித்தது.

இளம் மனங்கள் தங்கள் படைப்புகளை தன்னம்பிக்கையுடன் விளக்கி, திறன், படைப்பாற்றல் மற்றும் பார்வையை வெளிப்படுத்தினர்.

ரோபோ சை நெக்சஸ் 2026 ஒரு எக்ஸ்போ மட்டும் அல்ல. அது ஒரு இயக்கம்.

அறிவியலில் பெண்களை கொண்டாடும் இயக்கம்.

மேவரிக்ஸ்களை உருவாக்கும் இயக்கம்.

விக்சித் பாரத்தை உருவாக்கும் இயக்கம்.

எதிர்காலம் புதுமையானது.

எதிர்காலம் உட்சேர்ப்பானது.

எதிர்காலம் இன்று உருவாகிறது.

ஸ்ரீ சைதன்யா ஃப்யூச்சர் பாத்வேஸ், மேடவாக்கம், பவானி அம்மன் கோயில் தெருவில், பள்ளிக்கரணை ஜெயச்சந்திரன் எதிரில் அமைந்துள்ள புதிய தலைமுறை சர்வதேச பள்ளியாகும்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் டதி பள்ளி சந்திப்பு அருகில் உள்ள ராஜீவ் காந்தி சிலை அருகே பாரத பிரதமர் மோடியின் உருவ பொம்மையை காங்கிரஸ் கட்சியினர் தூக்கிலிட்டதை கண்டித்து பாஜகவினர் நேற்று கோட்டார் காவல் நிலையம் முன்பு குவிந்து முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்உடனடியாக பிரதமர் மோடியின் உருவ பொம்மையை தூக்கிட்டு பிரதமரை கொச்சை படுத்திய சம்பவத்தில் தொடர்புடைய அனைவரையும் கைது செய்ய வேண்டும் என கோரிக்கையை முன்வைத்து பாஜகவினர் போராட்டம் நடைபெற்றது.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை வலியுத்தியும், 100% வாக்குப்பதிவை வலியுறுத்தியும் நடைபெற்ற கையெழுத்து இயக்கத்தை மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழன் துவக்கி வைத்தார்.



■ மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற +2 வகுப்பு பொதுத்தேர்வு மையம் ஓ.சி.பி.எம். பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



## தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 73 வது பிறந்தநாள் விழா

### பெரியகுளம் நகர் கழக செயலாளர் போட்டி தேர்வு மாணாக்கர்களின் நலன் கருதி ரூ 25000/. மதிப்பிலானஇலவச புத்தகம் வழங்கல்

தேனி, மார்ச்.3-

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளர், தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ் செல்வன் அறிவுறுத்தலின்படி, பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார் வழிகாட்டுதலின்படி,

பெரியகுளம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் / கழக விவசாய அணி இணை செயலாளர் முத்துராமலிங்கம் ஆலோசனை படி

பெரியகுளம் நகர் கழக செயலாளர் முகமது இலியாஸ்


பெரியகுளம் தென்கரை நூற்றாண்டு நூலகத்தில் அரசு போட்டி தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருக்கும் 80 மாணாக்கர்களின் நலன் கருதி ரூ 25,000/ மதிப்பிலான புத்தகங்களை இலவசமாக வழங்கினார். மேலும் நூலக ஆர்வலர்கள், மாணாக்கர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் தமிழக முதலமைச்சர் பிறந்தநாள் விழாவினை கொண்டினர்.

பெரியகுளம் நகர் கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் நகர் மன்ற தலைவர் சுமிதா சிவக்குமார், நகர அவைத்தலைவர் வெங்கிடாசலம், தென்கரை நூலக வாசகர் வட்ட தலைவர் அன்புக்கரசன், திமுக நகர் கழக நிர்வாகிகள், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை தலைவர் கார்த்தி, நகர விளையாட்டு மேம்பாட்டு அணி துணை தலைவர் ஜான்,நகர சுற்றுச்சூழல் அணி பழனிகுமார்,

மருத்துவர் இளங்கோவன்,நூலகர்கள் விசுவாசம், சண்முகம், பாக்கியலட்சுமி,

வார்டு கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பாக முகவர்கள், இளைஞர் அணி ,மாணவர் அணி மற்றும், மகளிர் அணியினர், மாவட்ட, நகர சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்-

## “கோவிலுக்கு செல்லும் பாதை முடக்கம்!” — ‘நத்தம் புறம்போக்கு’ நிலத்தில் ஆக்கிரமிப்பு குற்றச்சாட்டு; பொதுமக்கள் சாலை மறியல் எச்சரிக்கை



மதுரை, மார்ச். 3-

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா தெப்பத்துப்பட்டி கிராமத்தில் பொதுமக்கள் பயன்படுத்தி வந்த நடப்பாதை ஆக்கிரமிக்கப் பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதுகுறித்து கிராம மக்கள் கோட்டாட்சியரிடம் மனு அளித்து உடனடி நடவடிக்கை கோரியுள்ளனர்.

கிராமத்தில் இருந்து மேற்குப் பகுதியில் உள்ள சிவன் கோவிலும், விவசாய தோட்டங்களுக்கும் செல்ல பொதுமக்கள் பல ஆண்டுகளாக பயன்படுத்தி வந்த பாதை சிலரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அந்த இடம் ‘நத்தம் புறம்போக்கு’ நிலம் என சர்வே செய்யப்பட்டதாகவும், கடந்த 05012026 அன்று வட்டாட்சியர் அலுவலகம் சார்பில் நோட்டீஸ் ஒட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஆனால் நோட்டீஸ் வழங்கப்பட்ட பிறகும் சம்பந்தப்பட்டவர்கள் ஆக்கிரமிப்பை அகற்றவில்லை என்றும், பொதுமக்கள் செல்லும் பாதையை மறித்து வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதனால் கோவில் தரிசனம் மற்றும் விவசாய பணிகளுக்கு செல்லும் மக்களுக்கு பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், உடனடியாக ஆக்கிரமிப்பை அகற்றி பாதையை பொதுமக்கள் பயன் பாட்டிற்கு திறந்து விட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனகிராம மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## போடியில் திமுகவில் இணைந்த ஓ.பன்னீர்செல்வத்திற்கு மேளதாளங்களுடன் வரவேற்பு



போடி மார்ச். 03-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வருகையை கொண்டாடும் வகையில், திமுக நிர்வாகிகள் போடிநாயக்கனூர் அரண் மனை முன்பாக மேள தாளங்களுடன் வரவேற்பு அளித்தனர். ஓ.பன்னீர்செல்வம் திமுகவில் இணைந்ததை கொண்டாடும் வகையில், இந்த வரவேற்பு நிகழ்ச்சி நடை பெற்றது. இதில் பங்கேற்ற திமுக தொண்டர்கள் ஓ.பன்னீர்செல்வத்தை வரவேற்று, இனிப்பு வழங்கி, வானவேடிக்கை நடத்தி, கோஷங்கள் எழுப்பினர். தேனி பாராளுமன்ற உறுப்பினர் தேனி திமுக வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் தலைமையில், போடி நகர செயலாளர் புருஷோத்தமன் முன்னிலையில், போடி திமுக மாண வரணி அமைப்பாளர் முத்துப்பாண்டி ஏலக்காய் மாலை அணிவித்து வரவேற்றார். திமுக கட்சி நிர்வாகிகளும் உறுப்பினர்களும் தொண்டர்களும் திரளாக கலந்து கொண்டனர்.


**வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் சிவகங்கை**

**ந.க.பி1 ந.க.பி.1 416/2026**

செல்வி (வயது 46/2026)
க/பெ.ஈசுவரன்
கதவு எண்.43 வடக்கு தெரு கிராப்பட்டி திருச்சிராப்பள்ளி.

/எதிர்/

1. வட்டாட்சியர் அவர்கள் வட்டாட்சியர் அலுவலகம் சிவகங்கை.
2. சார்பதிவாளர் அவர்கள் சார்பதிவாளர் அலுவலகம் மதகுபட்டி.

....எதிர்மனுதார்கள்

ஷை மனுதார் தரப்பில் வணக்கமாய் தாக்கலாகும் அபிடவிட்டு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி, கிராப்பட்டி, வடக்கு தெரு, கதவு எண்.43 என்ற முகவரியில் வசித்து வரும் திரு.ஈசுவரன் அவர்கள் மனைவி இந்து சுமார் 46 வயதுள்ள செல்வி ஆகிய நான் பிரமாணத்தின் பேரில் எழுதி வைத்த அபிடவிட்டு.

1. நான் ஷை நிர் வழக்கின் மனுதார் ஆவேன்.

2. மேற்படி நிர் வழக்கில் காளையப்பன் மகனும், எனது தந்தையுமான லேட். நடராஜன் கடந்த 23.11.1983ம் தேதியில் சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், பாகனேரி பஞ்சாயத்து, பாகனேரி கிராமத்தில் வைத்து இயற்கை மரணம் அடைந்துவிட்டார். எனது தந்தை இறந்த சமயம் எனக்கு போதிய விவரம் இன்மை காரணமாகவும், அறியாமையின் காரணமாகவும் எனது தந்தை இறப்பை உரிய இறப்பு பதிவேட்டில் பதிவு செய்யாமல் விட்டுவிட்டேன் இது வேண்டுமென்றே ஏற்பட்டது அல்ல தெய்வாதீனமாக ஏற்பட்டதே ஆகும்.

**வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் சிவகங்கை**

**ந.க.பி1 ந.க.பி.1 417/2026**

செல்வி (வயது 46/2026)
க/பெ.ஈசுவரன்
கதவு எண்.43 வடக்கு தெரு கிராப்பட்டி திருச்சிராப்பள்ளி.

/எதிர்/

1. வட்டாட்சியர் அவர்கள் வட்டாட்சியர் அலுவலகம் சிவகங்கை.
2. சார்பதிவாளர் அவர்கள் சார்பதிவாளர் அலுவலகம் மதகுபட்டி.

....எதிர்மனுதார்கள்

ஷை மனுதார் தரப்பில் வணக்கமாய் தாக்கலாகும் அபிடவிட்டு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி, கிராப்பட்டி, வடக்கு தெரு, கதவு எண்.43 என்ற முகவரியில் வசித்து வரும் திரு.ஈசுவரன் அவர்கள் மனைவி இந்து சுமார் 46 வயதுள்ள செல்வி ஆகிய நான் பிரமாணத்தின் பேரில் எழுதி வைத்த அபிடவிட்டு.

1. நான் ஷை நிர் வழக்கின் மனுதார் ஆவேன்.

2. மேற்படி நிர் வழக்கில் நடராஜன் மனைவியும், எனது தாயாருமான லேட்.இந்திரா கடந்த 02.06.1989ம் தேதியில் சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், பாகனேரி பஞ்சாயத்து, பாகனேரி கிராமத்தில் வைத்து இயற்கை மரணம் அடைந்துவிட்டார். எனது தாயார் இறந்த சமயம் எனக்கு போதிய விவரம் இன்மை காரணமாகவும், அறியாமையின் காரணமாகவும் எனது தாயார் இறப்பை உரிய இறப்பு பதிவேட்டில் பதிவு செய்யாமல் விட்டுவிட்டேன் இது வேண்டுமென்றே ஏற்பட்டது அல்ல தெய்வாதீனமாக ஏற்பட்டதே ஆகும்.


## தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் பட்டமளிப்பு விழா



தேவகோட்டை மார்ச் 03-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் 20 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா கல்லூரி ஆட்சிக்குழுத் தலைவர் அண. லெட்சுமணன் செட்டியார் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் தேர்வாணையர் பேராசிரியர் ஜோதிபாசு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கல்லூரியில் பயின்று பட்டம் பெற்ற 293 இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்குப் பட்டம் வழங்கிப் பேருரையாற்றினார். அவர்தம் உரையில் பின்தங்கிய இப்பகுதியில் உள்ள மனித வளத்தை பயனுள்ளதாக மாற்ற வள்ளல் அண்ணாமலை செட்டியார் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியின் பயனாய் இன்று நீங்கள் பட்டம் பெறுகிறீர்கள். நீங்கள் வாங்கிய பட்டம் வெறும் வேலைக்குச் செல்வதற்காகவோ உங்கள் வசதியை உயர்த்திக் கொள்வதற்காகவோ அல்ல இப்பட்டத்தினால் சமுதாய அக்கறையும் பொறுப்பும் உங்களுக்கு மேம்பட வேண்டும் என்பதே கல்வியின் அடிப்படைக் குறிக்கோள். இதனை இங்கு பயின்ற அனைவருமே அறிந்து கொள்ள வேண்டும். இன்றைய அறிவியல் தொழில் நுட்பங்களினால் பெறும் செய்திகளை எல்லாம் உண்மை என்று நம்பும் போக்கு நம்மிடையே உள்ளது. அவ்வாறு வரும் செய்திகளில் எது உண்மை, எது பொய் என்பதை பகுத்துப் பார்க்க வைப்பது கல்வியின் நோக்கம் ஆகும். மேலும் உங்களிடம் கருணை அன்பு மனிதநேயம் என்ற மூன்றும் ஒரு சேர இருந்தால் நீங்கள் வாங்கிய பட்டத்தினால் எல்லாவிதமான நன்மைகளையும் இந்த உலகிற்குக் கொடுக்க முடியும். இதனையே நீங்கள் பெற்ற பட்டத்திற்கான உறுதிமொழியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென உரையாற்றினார். விழாவில் கல்லூரி முதல்வர் பேராசிரியர் நாவுக்கரசு வரவேற்று விழாவின் நிறைவில் பட்டதாரிகளின் பட்டங்களை உறுதி செய்தார். இவ்விழாவில் கல்லூரியின் முன்னாள் முதல்வரும் கல்லூரியின் தற்போதைய சுயநிதிப் பிரிவு இயக்குநருமான பேராசிரியர் அருணாசலம் முன்னாள் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் ஆறுமுகம் பட்டதாரிகளின் பெற்றோர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள், நகர்ப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## “பட்டியலின மக்களுக்குள் பிளவை தூண்டும் சதி!” — கருப்பையா மீது கடும் நடவடிக்கை கோரி எஸ்.பி. அலுவலகத்தில் மனு




மதுரை, மார்ச் 3-

மதுரை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தலித் விடுதலை இயக்கத்தின் தலைவர் கருப்பையா தலைமையில் மேலமாத்தூர் காமாட்சிபுரம் பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள் மனு ஒன்றை வழங்கினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கருப்பையா, மேலமாத்தூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மாணிக்கத்தின் மகன் கருப்பையா, ஊரில் உள்ள தனிநபருக்குச் சொந்தமான இடத்தை வாங்க முயன்றதாகவும், அந்த நபர் சம்மதிக்காத நிலையில் அதே இடத்தை வேறு ஒருவருக்கு விற்றதாகவும் தெரிவித்தார். இதனால் ஏற்பட்ட விரோதத்தில், அந்த இடத்தை வாங்கிய பெண்ணின் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டதாக குற்றஞ் சாட்டினார்.இதுகுறித்து பாதிக்கப்பட்டவர்கள் நாகமலை புதுக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும், சம்பந்தப்பட்டவர்மீது வழக்கு பதிவு செய்து சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என காவல்துறையினர் தெரிவித்ததாகவும் கூறினார்.

ஆனால் அதனை ஏற்க மறுத்த குற்றச்சாட்டுக்குட்பட்டவர், தன்னுடைய உறவினரின் காலி இடத்தில் தீ வைத்து, இடம் வாங்கியவர்களே தீ வைத்து தன்னை கொலை செய்ய முயற்சித்ததாக பொய்யான புகார் அளித்துள்ளதாக குற்றம்சாட்டினார்.மேலும், ஊர் பொதுமக்களிடையே பிரச்சனை உருவாக்கும் வகையில் பல்வேறு குளறுபடிகள் நடைபெற்று வருவதாகவும், சமூக அமைதியை குலைக்கும் செயலில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.இதனால் சம்பந்தப்பட்டவர்மீது உரிய சட்டநடவடிக்கை எடுக்க மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் கோரப்பட்டுள்ளது. இதுகுறித்து உரிய விசாரணை நடத்தப்படும் என காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161